DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.153/2014**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | முகம்மது அப்துல் கமால் நாசர் | Age | : | 67 |
| F/N | : | கோஸ் முகம்மது | Occupation | : | உள்ளாட்சி நிதி தனிக்கை ஆய்வாளர் (ஓய்வு) |
| Village | : | இராமேஸ்வரம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 10th day of August 2023.

**10.08.2023**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் உள்ளாட்சி நிதி தனிக்கை ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவரை ஆய்வின்போது பார்த்துள்ளேன். கடந்த 1989ம் ஆண்டு கடலாடி யூனியனுக்கு உட்பட்ட அனைத்து பள்ளிகளையும் உதவி ஆராய்வாளர், உள்ளாட்சி நிதி தனிக்கை அவர்களின் பணி திட்ட அறிக்கையின் மூலம் நிதி தனிக்கை செய்தேன். அந்த ஆய்வின்போது மேலச்செல்வனூரில் உள்ள சிலுவை நடுநிலைப்பள்ளியின் 1987-1988ம் ஆண்டுக்கான தனிக்கையை மேற்கொண்டேன். மேற்படி ஆய்வின்போது கண்ட குறைபாடுகளை குறித்து அறிக்கை தயார் செய்து உதவி ஆராய்வாளர், உள்ளாட்சி நிதி தனிக்கை அவர்களிடம் சமர்ப்பித்தேன். அந்த பள்ளியில் உணவு பொருட்கள் இருப்பு மற்றும் ரொக்க கை இருப்பு ஆகியவற்றில் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டது. உணவு பொருட்கள் இருப்பு மற்றும் ரொக்க கை இருப்பு ஆகியவற்றின் மொத்த மதிப்பு ரூ.19,453/- ஆகும். அதற்கு ஆஜர் எதிரி நக்கீரன் என்பவர் தான் பொறுப்பாவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. மேலச்செல்வனூர் பள்ளியில் எத்தனை குழந்தைகள் அந்த சமயத்தில் படித்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆய்வின்போது மேற்படி பள்ளியில் எத்தனை குழந்தைகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும் அறிக்கையில் சொல்லியுள்ளேன். நான் கொடுத்த அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பள்ளியின் கணக்கு வழக்குகளை யார் எழுதுவார் என்றால் ஆஜர் எதிரி தான் எழுதுவார். ஒவ்வொரு நாளின் வரவு செலவு கணக்குகளை அன்றைய தினமே பதிவேடுகளில் எழுதி வைக்க வேண்டும் என்றால் சரிதான். மேற்படி எனது அறிக்கையில் மேற்படி பள்ளியில் மொத்தமாக 1000 கிலோ அரிசி குறைபாடாக இருந்தது என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. ஒவ்வொரு மாதமும் எவ்வளவு அரிசி குறைபாடானது என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. கடந்த 01.11.1987 ன் இருந்த ஆரம்ப இருப்பை பார்த்தவுடன் தான் மேற்படி பள்ளியின் குறைபாடு இருந்தது குறித்து எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். பொதுவாக நாங்கள் எத்தனை மாதத்திற்கு ஒரு முறை தனிக்கை செய்வோம் என்றால் ஒரு மாதத்திற்கு ஒரு யூனியனில் உள்ள பள்ளி என்ற முறையில் தனிக்கை செய்வோம். ஒரு புகார் வந்தால் தான் நாங்கள் தனிக்கை செய்வோம் என்றால் சரியல்ல. கடந்த 17.02.1988 ல் பள்ளியின் தலைமையாசிரியர் சிக்கந்தர் என்பவர் தான் பொறுப்பில் இருந்தார் என்றால் சரிதான். மேற்படி தேதியில் தலைமையாசிரியர் பார்வையாளர் பதிவேட்டில் எந்த பதிவும் செய்யவில்லை என்றால் சரிதான். அதை பதிவு செய்ய வேண்டிய பொறுப்பு தலைமையாசிரியருக்கு உண்டு என்றால் சரிதான்.

3. பள்ளி கல்வி துறையில் இருந்து வரும் மானியங்கள், கருணை தொகைகள் வங்கி மூலம் தான் வரும் என்றால் சரிதான். என்னுடைய அறிக்கையில் மாதம் மாதம் அந்த பள்ளிக்கு வந்த பொருட்களின் விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னுடைய அறிக்கையில் தலைமையாசிரியர் சிக்கந்தர் மற்றும் சத்துணவு அமைப்பாளர் (பொறுப்பு) கார்மேகம் ஆகியோரும் பொறுப்பு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பள்ளி தலைமையாசிரியருக்கும், ஆஜர் எதிரிக்கும் அந்த சமயத்தில் பிரச்சனை இருந்ததால் தலைமையாசிரியர் கொடுத்த புகாரின் பேரில் பொய்யாக வழக்கு பதிவு செய்துவிட்டு அதற்கு ஆதரவாக நான் தனிக்கை செய்து அறிக்கை தாக்கல் செய்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**